ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2352/09 - 2023 ඔක්තෝබර් මස 03 වැනි අඟහරුවාදා - 2023.10.03

2352/09 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்***

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகிய பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 ஆவது மாடிகள்,
"சுஹுருபாய", சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2023, செத்தெம்பர் 15.

1A – PG 6490 – 21 (2023/10)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*வவுனியா நகர அபிவிருத்தி பிரதேச விரிவாக்கம் மற்றும் 26.11.2009 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 1629/ 18 இனை உடைய வர்த்தமானியின் திருத்தம்*

*நிரல் I*

*நகர அபிவிருத்தி பிரதேச விரிவாக்கம் மற்றும் 26.11.2009 ஆந் திகதியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1629/ 18 இன் திருத்தங்களையும் உள்ளடக்கிய வட மாகாணத்தின் வவுனியா மாவட்டத்தின் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள கீழ்வரும் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட அனைத்து நிலப் பரப்புகளுமாகும்.*

**1. வவுனியா பிரதேச செயலகப் பிரிவு**

| | |
|---|---|
| 216A | பாறைநட்டகல் |
| 215 | நொச்சிமோட்டை |
| 215A | மகாறம்பைக்குளம் |
| 214A | தாண்டிக்குளம் |
| 218F | கூமாங்குளம் |
| 214B | பட்டாணிச்சி புளியங்குளம் |
| 214C | வவுனியா நகரம் வடக்கு |
| 215B | காத்தார்சின்னக்குளம் |
| 244A | இறம்பைக்குளம் |
| 214 | வவுனியா நகரம் |
| 214D | வைரவபுளியங்குளம் |
| 214E | பண்டாரிக்குளம் |
| 214F | தோணிக்கல் |
| 244C | கோவில்குளம் |
| 244D | வெளிக்குளம் |
| 244B | சமலங்குளம் |
| 214G | மூன்றுமுறிப்பு |
| 216 | புதுக்குளம் |
| 218C | மரக்காரம்பளை |
| 217 | இராஜேந்திரன்குளம் |
| 218A | பம்பைமடு |
| 218D | சாஸ்திரிகூழாங்குளம் |
| 218G | கந்தபுரம் |
| 217C | செக்கட்டிபுலவு |
| 217B | சாலம்பைக்குளம் |
| 218 | நெளுக்குளம் |

**2. வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவு**

| | |
|---|---|
| 213D | அக்போபுர |
| 213B | புதுவிளாங்குளம் |
| 212 | மடுக்கந்த (பகுதி) |
| 212E | நெடுங்குளம் (பகுதி) |
| 212A | ஈரட்டைப்பெரியகுளம் |

*நிரல் II*

**வடக்கு:**

*சாலம்பைக்குளம் (217B) கிராம அலுவலர் பிரிவின் வடமேற்கு எல்லையிலிருந்து அதே கிராம அலுவலர் பிரிவின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லையை நோக்கியதாக பம்பைமடு (218A) கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையை சந்திக்கும் புள்ளிவரையும் அதிலிருந்து அதே கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையூடாக சாஸ்திரிகூழாங்குளம் (218D) கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளிவரை, அதிலிருந்து சாஸ்திரிகூழாங்குளம் (218D) கிராம அலுவலர் பிரிவின் வடமேற்கு எல்லைகளை நோக்கியதாகச் சென்று பாறைநட்டகல் (216A) கிராம அலுவலர் பிரிவின் வடமேற்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளிவரையும் அதிலிருந்து அதே கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையூடாகச் சென்று நொச்சிமோட்டை (215) கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லை மற்றும் அதே கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளிவரை.*

**கிழக்கு:**

*இறுதியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து நொச்சிமோட்டை (215) கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையூடாக அக்போபுர (213D) கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையை அடைந்து அதிலிருந்து அக்போபுர (213D) கிராம அலுவலர் பிரிவு மற்றும் புதுவிளாங்குளம் (213B) கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையூடாக காத்தார்சின்னகுளம் (215B) கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளிவரையும், அதிலிருந்து அதே கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையூடாக கிழக்கு எல்லையை அடைந்து அதிலிருந்து நெடுங்குளம் (212E) கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளிவரையும், அதிலிருந்து நிலைக்குத்தாக நெடுங்குளம் (212E) மற்றும் மடுக்கந்த (212) கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையை அடைந்து வெளிக்குளம் (244D) கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளிவரையும் அதிலிருந்து வெளிக்குளம் (244D) கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையூடாக சென்று சமலங்குளம் (244B) கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளிவரையும், அதிலிருந்து அதே கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையை நோக்கியதாகச் செல்லும் புள்ளிவரை.*

**தெற்கு:**

*இறுதியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து சமலங்குளம் (244B) கிராம அலுவலர் பிரிவின் தெற்கு மற்றும் மேற்கு எல்லையூடாக ஈரட்டைப்பெரியகுளம் (212A) கிராம அலுவலர் பிரிவின்*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| | *கிழக்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளிவரை, அதிலிருந்து அதே கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையை நோக்கியதாக கந்தபுரம் (218G) கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லை மற்றும் இராசேந்திரகுளம் (217) கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையும் அதிலிருந்து இராசேந்திரகுளம் (217) கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையூடாக மேற்கு எல்லையை அடைந்து செக்கட்டிபிலவு (217C) கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையூடாக சாலம்பைக்குளம் (217B) கிராம அலுவலர் பிரிவின் தென்மேற்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரைக்கும்.* |
| | **மேற்கு:** |
| | *இறுதியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து சாலம்பைக்குளம் (217B) கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையூடாக அதே சாலம்பைக்குளம் (217B) கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரைக்கும்.* |

EOG *10-0010*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*